**செய்தி வெளியீடு எண் : 1355** **நாள் : 07.08.2022**

**செய்தி வெளியீடு**

**மேட்டூர் அணையிலிருந்து காவிரி ஆற்றில் வெளியேற்றப்படும் அதிக அளவு உபரி நீரினால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமசந்திரன் அவர்களது அறிக்கை**

**1. மழை விபரம்**

தென் மேற்கு பருவமழைக் காலத்தில், 01–06–2022 முதல் 06–08–2022 முடிய 269.0 மி.மீ. மழை பெய்துள்ளது. இது இயல்பான மழை அளவைக் காட்டிலும் 102 விழுக்காடு கூடுதல் ஆகும்.

கடந்த **24** மணி நேரத்தில், 16 மாவட்டங்களில் மழைப்பொழிவு ஏற்பட்டுள்ள நிலையில் மாநில சராசரி 2.71 மி.மீ. ஆகும்.

**2. அதிக மழைப்பொழிவு ஏற்பட்டுள்ள மாவட்டங்கள்**

| | | |
|---|---|---|
| 1) | நீலகிரி | 28.54 மி.மீ. |
| 2) | கோயம்புத்தூர் | 19.91 மி.மீ. |
| 3) | தேனி | 5.30 மி.மீ. |
| 4) | திருப்பத்தூர் | 3.91 மி.மீ. |
| 5) | கிருஷ்ணகிரி | 2.11மி.மீ. |

**3. கனமழை விபரம் (64.5 முதல் 115.5 மி.மீ வரை)**

| **வ. எண்.** | **மாவட்டம்** | **மழைமானி நிலையம்** | **பதிவான மழை அளவு (மி.மீ.)** |
|---|---|---|---|
| 1 | நீலகிரி | அவலாஞ்சி | 106 |
| 2. | | மேல் பவானி | 105 |
| 3. | | வட்டாட்சியர் அலுவலகம், பந்தலூர் | 98.2 |
| 4. | | ஹாரிசன் மலையாளம் லிமிடெட், | 96 |
| 5. | கோயம்புத்தூர் | சின்ன கல்லார் | 87 |

சேத விபரம்

4. மனித உயிரிழப்பு விவரம் :-

| வ. எண் | மாவட்டம் | ஆண் | பெண் | குழந்தை | மொத்தம் | உயிரிழப்பிற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | வேலூர் | 1 | 0 | 0 | 1 | மரம் விழுந்து |

5. காயமடைந்தவர்கள் விவரம் :-

| வ. எண் | மாவட்டம் | ஆண் | பெண் | குழந்தை | மொத்தம் | காயத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|
| ஏதுமில்லை | | | | | | |

6. கால்நடை இழப்பு:-

| வ. எண். | மாவட்டம் | கால்நடை | செம்மறியாடு / வெள்ளாடு | கோழி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | கடலூர் | 0 | 1 | 0 | 1 |
| மொத்தம் | | 0 | 1 | 0 | 1 |

7. குடிசை / வீடுகள் சேத விவரம் :-

| வ. எண் | மாவட்டம் | குடிசைகள் | | வீடுகள் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பகுதி | முழுமை | பகுதி | முழுமை | பகுதி | முழுமை |
| 1 | அரியலூர் | 0 | 0 | 1 | 0 | 1 | 0 |
| 2 | கோயம்புத்தூர் | 0 | 0 | 2 | 3 | 2 | 3 |
| 3. | தருமபுரி | 0 | 0 | 2 | 0 | 2 | 0 |
| 4. | ஈரோடு | 0 | 0 | 1 | 0 | 1 | 0 |
| 5. | மதுரை | 3 | 0 | 0 | 0 | 3 | 0 |
| 6. | ராணிப்பேட்டை | 1 | 0 | 0 | 0 | 1 | 0 |
| 7. | நீலகிரி | 9 | 2 | 0 | 0 | 9 | 2 |
| 8. | தேனி | 4 | 0 | 0 | 0 | 4 | 0 |
| 9. | திருச்சிராப்பள்ளி | 1 | 0 | 0 | 0 | 1 | 0 |
| மொத்தம் | | 18 | 2 | 6 | 3 | 24 | 5 |

8. நிவாரண முகாம்கள்

பாதிப்பிற்குள்ளான 2597 குடும்பங்களைச் சார்ந்த 8567 நபர்கள் 69 நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு தேவையான உணவு, பாதுகாப்பான குடிநீர், மருத்துவ வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

| வ. எண். | மாவட்டம் | நிவாரண முகாம்களின் எண்ணிக்கை | குடும்பங்களின் எண்ணிக்கை | ஆண்கள் | பெண்கள் | குழந்தைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அரியலூர் | 2 | 78 | 86 | 70 | 27 | 183 |
| 2 | கடலூர் | 10 | 262 | 503 | 534 | 131 | 1168 |
| 3 | ஈரோடு | 19 | 548 | 684 | 716 | 304 | 1704 |
| 4 | கரூர் | 3 | 123 | 158 | 159 | 26 | 343 |
| 5 | மயிலாடுதுறை | 7 | 677 | 936 | 1033 | 388 | 2357 |
| 6 | நாமக்கல் | 12 | 601 | 647 | 761 | 352 | 1760 |
| 7 | தஞ்சாவூர் | 5 | 141 | 283 | 314 | 42 | 639 |
| 8 | நீலகிரி | 4 | 28 | 25 | 31 | 34 | 90 |
| 9 | திருச்சிராப்பள்ளி | 6 | 136 | 64 | 166 | 81 | 311 |
| 10 | திருப்பத்தூர் | 1 | 3 | 6 | 4 | 2 | 12 |
| | **மொத்தம்** | **69** | **2597** | **3392** | **3788** | **1387** | **8567** |

9. வானிலை முன்னெச்சரிக்கை

**07.08.2022 அன்று இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை:**
வட தமிழகம், கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, தேனி, மற்றும் திண்டுக்கல் மாவட்டங்கள்.

**08.08.2022 அன்று லேசானது முதல் மிதமான மழை:**
வட தமிழகம், கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, தேனி, மற்றும் திண்டுக்கல் மாவட்டங்கள்.

**09.08.2022 மற்றும் 10.08.2022 அன்று லேசானது முதல் மிதமான மழை:** மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதி, அதனை ஒட்டிய மாவட்டங்கள், கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்கள்.

**10. முக்கிய அணைகள் / நீர்த்தேக்கங்களில் நீர் இருப்பு விபரம் (07–08–2022 நிலவரப்படி)**

| வ. எண். | அணை / நீர்த்தேக்கம் | கொள்ளளவு அடி / மில்லியன் கன அடி | நீர் இருப்பு அடி / மில்லியன் கன அடி | நீர் இருப்பின் விழுக்காடு | நீர் வரத்து (கன அடி) | நீர் வெளியேற்றம் (கன அடி) |
|---|---|---|---|---|---|---|
| 1. | மேட்டூர் | 120.00 | 120.05 | 100.09 | 125763 | 125266 |
| | | 93470 | 93550 | | | |
| 2. | பவானிசாகர் | 105.00 | 102.00 | 92.43 | 17388 | 17205 |
| | | 32800 | 30317 | | | |
| 3. | அமராவதி | 90.00 | 87.37 | 94.07 | 3028 | 2865 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 4047 | 3810 | | | |
| 4. | பெரியார் | 152.00 | 138.25 | 63.25 | 5027 | 4523 |
| | | 10570 | 6685 | | | |
| 5. | வைகை | 71.00 | 70.01 | 95.71 | 3040 | 2761 |
| | | 6091 | 5829 | | | |
| 6. | பாபநாசம் | 143.00 | 98.00 | 53.51 | 2168 | 1005 |
| | | 5500 | 2943 | | | |
| 7. | மணிமுத்தாறு | 118.00 | 74.30 | 32.90 | 212 | 55 |
| | | 5511 | 1813 | | | |
| 8. | பேச்சிப்பாறை | 48.00 | 41.98 | 79.86 | 621 | 257 |
| | | 4350 | 3474 | | | |
| 9. | பெருஞ்சாணி | 77.00 | 68.80 | 73.49 | 651 | 535 |
| | | 2890 | 2124 | | | |
| 10. | கிருஷ்ணகிரி | 52.00 | 49.75 | 84.79 | 4754 | 4261 |
| | | 1666 | 1416 | | | |
| 11. | சாத்தனூர் | 119.00 | 115.50 | 89.47 | 4017 | 3265 |
| | | 7321 | 6549 | | | |
| 12. | சோலையாறு | 160.00 | 162.10 | 102.50 | 5811 | 5913 |
| | | 5046 | 5172 | | | |
| 13. | பரம்பிக்குளம் | 72.00 | 68.38 | 93.84 | 5984 | 5384 |
| | | 13408 | 12584 | | | |
| 14. | ஆழியாறு | 120.00 | 117.30 | 95.21 | 2053 | 2458 |
| | | 3864 | 3675 | | | |
| 15. | திருமூர்த்தி | 60.00 | 29.85 | 37.01 | 51 | 21 |
| | | 1744 | 644 | | | |

**11. சென்னைக்கு குடிநீர் வழங்கும் நீர்த்தேக்கங்களில் நீர் இருப்பு விபரம் (07-08-2022 நிலவரப்படி)**

| வ. எண். | அணை / நீர்த்தேக்கம் | கொள்ளளவு அடி / மில்லியன் கன அடி | நீர் இருப்பு அடி / மில்லியன் கன அடி | நீர் இருப்பின் விழுக்காடு | நீர் வரத்து (கன அடி) | நீர் வெளியேற்றம் (கன அடி) |
|---|---|---|---|---|---|---|
| 1. | பூண்டி | 35.00 | 27.30 | 36.97 | 0 | 463 |
| | | 3231 | 1194 | | | |
| 2. | சோழவரம் | 18.86 | 2.97 | 12.13 | 30 | 0 |
| | | 1081 | 131 | | | |
| 3. | செங்குன்றம் | 21.20 | 19.81 | 90.12 | 224 | 156 |
| | | 3300 | 2974 | | | |
| 4. | செம்பரம்பாக்கம் | 24.00 | 22.21 | 86.96 | 182 | 114 |
| | | 3645 | 3174 | | | |
| 5. | வீராணம் | 8.50 | 8.50 | 99.73 | 155 | 155 |
| | | 1456 | 1456 | | | |
| 6. | தேர்வாய் கண்டிகை | 36.61 | 36.61 | 100.00 | 90 | 75 |
| | | 500 | 500 | | | |

12. முன்னெச்சரிக்கை

உபரி நீர் வெளியேற்றப்படுவதால், பாதிப்பிற்குள்ளாகும் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து காவிரி/ கொள்ளிட கரையோர மாவட்ட ஆட்சியர்களுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 04.08.2022 அன்று காணொலி காட்சி மூலம் ஆலோசனை மேற்கொண்டார். மேலும், இம்மாவட்டங்களுக்கு விரைந்து சென்று உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும், கண்காணிப்பு அலுவலர்களையும் அறிவுறுத்தியதன் பேரில் மாவட்டங்களில் விரைவாக நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 05.08.2022 இரவு சென்னை எழிலகம் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை வளாகத்திலுள்ள மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையத்திற்கு வருகை புரிந்து வெள்ள நிலைமை மற்றும் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்தார்.

பின்னர், ஈரோடு, நாமக்கல் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களிடம் தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு பேசி, அவர்களுக்கு அங்கு போதுமான உணவு, பாதுகாப்பான குடிநீர், மருத்துவ வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்கப்பட்டுள்ளதா என்று கேட்டறிந்தார். மேலும், ஈரோடு, நாமக்கல் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர்களிடமும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கள நிலவரம் குறித்து கேட்டறிந்து, உரிய நிவாரண நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

இன்று (07.08.2022) காலை 8.00 மணி முதல் மேட்டூர் அணையிலிருந்து 1,10,000 கன அடி உபரி நீரும், பவானிசாகர் அணையிலிருந்து 13,000 கன அடி உபரி நீரும் வெளியேற்றப்பட்டு வருகிறது. மேட்டூர் மற்றும் பவானிசாகர் அணையிலிருந்து தொடர்ந்து அதிக அளவு உபரி நீர் வெளியேற்றப்படுவதால், ஆற்றின் கரையோரங்களில் வசிக்கும் மக்களின் பாதுகாப்பு கருதி, பொதுவான

எச்சரிக்கை நடைமுறை (CAP – Common Alert Protocal) மூலம் 29.10 இலட்சம் செல்லிடப்பேசிகளுக்கு எச்சரிக்கை குறுஞ்செய்திகள் அனுப்பப்பட்டுள்ளது.

07.08.2022 மற்றும் 08.08.2022 அன்று மன்னார் வளைகுடா, தமிழக கடற்கரை பகுதிகள் மற்றும் தென்மேற்கு வங்க கடல் பகுதிகளில் மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வரை பலத்த காற்று வீசக்கூடும் என்பதால், மீனவர்கள் இந்தப் பகுதிகளில் மீன் பிடிக்கச் செல்ல வேண்டாம் என இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ள நிலையில், இந்த எச்சரிக்கை செய்தி, மீன்வளத் துறை மூலமாக மீனவர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேரிடர் தொடர்பான தகவல்களை துறை அலுவலர்களுக்கும், பொது மக்களுக்கும் தெரிவிக்கும் வகையில், **மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையமும், மாவட்ட அவசரக் கட்டுப்பாட்டு மையங்களும் 24 மணி நேரமும்** கூடுதலான அலுவலர்களுடன் செயல்பட்டு வருகின்றன.

பொதுமக்கள் மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையம் மற்றும் மாவட்ட அவசரக் கட்டுப்பாட்டு மையத்தை முறையே **1070 மற்றும் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி** வாயிலாகவும், **வாட்ஸ் அப் எண். 94458 69848** மூலமாகவும் தொடர்பு கொண்டு புகார்களை பதிவு செய்யலாம்.

கன மழை மற்றும் வெள்ள பாதிப்புகளின் போது தேடல், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் மாவட்ட நிருவாகத்துடன் ஒருங்கிணைந்து ஈடுபடும் பொருட்டு திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 77 வீரர்களுடன் 3 குழுக்களும், நீலகிரி மாவட்டத்தில் 85 வீரர்களுடன் 3 குழுக்களும், நாமக்கல் மாவட்டத்தில் 65 வீரர்களுடன் 2 குழுக்களும், கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் தலா 1 குழுவும் ஆக மொத்தம் 348 வீரர்களைக் கொண்ட தேசிய பேரிடர் மீட்புப் படை மற்றும் தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை வீரர்களுடன் 11 குழுக்கள் நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

மேலும், கன மழை மற்றும் வெள்ளம் காரணமாக ஏற்படும் பாதிப்புகளை தவிர்த்திட தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதுமட்டுமின்றி, பாதிப்பு ஏற்படக் கூடிய இடங்களில் ஜே.சி.பி. இயந்திரங்கள், மரம்

அறுப்பான்கள் உள்ளிட்ட உபகரணங்களுடன் பல்துறை மண்டல குழுக்களையும், மீட்புக் குழுக்களையும், நிவாரண முகாம்களையும் தயார் நிலையில் வைத்திட மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தென்மேற்கு பருவமழை காலத்தில் ஏற்படும் கனமழை மற்றும் அதனைத் தொடர்ந்த வெள்ளம் காரணமாக ஏற்படும் பாதிப்புகளை தவிர்க்க தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், பொதுமக்கள் அரசு மற்றும் மாவட்ட நிருவாகம் மூலம் வழங்கப்படும் முன்னெச்சரிக்கை செய்திகளை கூர்ந்து கவனித்து செயல்படுமாறும், மாவட்ட நிருவாகத்திற்கு ஒத்துழைப்பு நல்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in